பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 06 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அகமதாபாத் விமான விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்துள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் கூறியுள்ளது.

2. இந்த விபத்து குறித்து முதற்கட்ட விசாரணை தொடங்கியுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

3. மாநிலங்களவைத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து போட்டியிட்ட 6 பேரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

4. கோவை. நீலகிரி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. **Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

அகமதாபாத் விமான விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்துள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் கூறியுள்ளது.

விமானத்தில் 242 பேர் பயணம் செய்த நிலையில் ஒருவர் மட்டும் உயிர்தப்பியுள்ளதாக அந்நிறுவனம் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

உயிர் தப்பியவர் லேசான காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விமான விபத்தில் குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானி உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்று ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வசதிக்காக தில்லி மற்றும் மும்பையில் இருந்து இரண்டு சிறப்பு விமானங்கள் இயக்கப்படுவதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் ஏர் இந்தியா கூறியுள்ளது.

<<<<>>>>

அகமதாபாத் விமான விபத்து குறித்து முதற்கட்ட விசாரணை தொடங்கியுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த இடத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் உள்ளிட்டோருடன் பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த விமான விபத்து குறித்து முழுமையாக ஆய்வு மேற்கொள்ள பல்துறை நிபுணர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவை மத்திய அரசு அமைக்கும் என்று தெரிவித்தார்.

விமான போக்குவரத்தில் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்தும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நிகழாமல் தடுப்பது குறித்தும் அந்த குழு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் அடுத்த ஆண்டுக்குள் ஒரு லட்சம் ட்ரோன்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. கமலேஷ் பஸ்வான் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 'ட்ரோன் மகளிர்' திட்டம் கிராமப்புற பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் என்றார்.

இத்திட்டத்தால் வேளாண் துறையில் பெண்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்கும் என்றும், அவர்களின் பொருளாதாரம் உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்றார்.

தமிழகத்தில் பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், பிரதமரின் கிராம சாலைத் திட்டம் உள்ளிட்டவற்றின் செயல்பாடுகள் குறித்து மத்திய – மாநில அரசு அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

அமிர்த நீர்நிலைகள் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

ஒருங்கிணைந்த முறையில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் திட்டங்களை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளை திரு. கமலேஷ் பஸ்வான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கோவிட் பாதிப்பு குறித்து அச்சம்கொள்ளத் தேவையில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்படவில்லை என்று கூறினார்.

தற்போது வீரியமில்லாத தொற்றே பரவி வருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மக்களிடையே நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

மக்கள் நலன் மற்றும் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி பேசிய அவர், நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் நகல் இன்று வெளியிடப்படும் என்று அரசுத் தேர்வுத்துறை இயக்ககம் கூறியுள்ளது.

நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் இதனை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு ஆறு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, திமுக-வை சேர்ந்த திரு வில்சன், திருமதி ராஜாத்தி, திரு எஸ் ஆர் சிவலிங்கம் ஆகியோரும், அதன் கூட்டணி கட்சியான மக்கள் நீதி மய்யத்தின் திரு கமலஹாசனும், அஇஅதிமுக-வின் திரு இன்பதுரை திரு தனபால் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்த இயக்கத்தில் ஒரு லட்சம் கிராமங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த இயக்கத்தின் மூலம் ஒரு கோடியே 12 லட்சம் விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ஆண்டு ஏழரை லட்சம் ஹெக்டேரில் இயற்கை விவசாயம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பருவமழைக் காலங்களில் மழைநீரை சேமிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான பொதுநல மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், மரியா கிளெட் ஆகியோர் அடங்கிய அமர்வு, நீர்நிலைகளைப் பராமரிப்பதற்கான திட்டங்களை முறையாக செயல்படுத்த வேண்டும் என்று கூறி வழக்கை முடித்து வைத்தது.

<<<<>>>>

கோவை. நீலகிரி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Dhandapani – 27 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவும் யுக்ரைனும் இரண்டாவது கட்ட கைதிகள் பரிமாற்ற நடைமுறைகளை மேற்கொண்டுள்ளன.

------------

அணுசக்தி தொடர்பான வாக்குறுதிகளை ஈரான் நிறைவேற்றவில்லை என்று ஐநா கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

------------

ஜம்மு-காஷ்மீர் யூனியன்பிரதேசத்தில் மின்துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

தமிழக சட்டப்பேரவை பொது நிறுவனங்கள் குழுவினர் திண்டுக்கல் மாவட்டத்தில் அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

------------

தேனி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டம் தொடர்பான பொதுமக்கள் குறைதீர்கூட்டம் நாளை நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங் கூறியுள்ளார்.

------------

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் வாகன சோதனையின்போது 13 மூட்டை குட்கா போதைப் பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர் ஒருவரைக் கைது செய்தனர்.

------------

அரியலூர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையினை ஆட்சியர் திரு. ரத்னசாமி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

------------

சென்னை அண்ணா நகரில் புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்கு மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

**Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

வடக்கு மேசிடோனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-6, 2-11, 11-4, 13-11 என்ற செட் கணக்கில் போர்ட்டோரிக்காவின் **Angel Naranjo – Oscar Birriel** இணையை வென்றது.

--------------

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சீனாவின் **Yaojie Zeng**-ஐ வென்றார்.

-------------

தாய்லாந்தில் நடைபெற்று வரும் பாரா பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் நித்யஸ்ரீ சுமதி சிவன், பாலக் கோலி மகளிர் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<The End>>>>**